பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**01 01 2026** **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் முதலாவது புல்லட் ரயில் சேவை அடுத்த ஆண்டு சுதந்திர தினத்தன்று தொடங்கும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. இந்தியாவும், பாகிஸ்தானும் பரஸ்பரம் இரு நாடுகளிலும் உள்ள அணு மையங்களின் பட்டியலை பரிமாறிக் கொண்டுள்ளன.

3. வந்தே மாதரம் பாடல், தேச ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் அடையாளமாக திகழ்கிறது என்று பிரசார் பாரதி தலைமை செயல் அதிகாரி திரு கௌரவ் துவிவேதி தெரிவித்துள்ளார்.

4. புதிய வகை **Fastag** பெற்றுள்ள கார்களுக்கு இனி **KYV** அட்டைகள் தேவையில்லை என்று இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அறிவித்துள்ளது.

5. ரஷ்யா பிடித்து வைத்துள்ள **Kherson** பகுதியில் யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் **24** பேர் உயிரிழந்தனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>

நாட்டின் முதலாவது புல்லட் ரயில் சேவை அடுத்த ஆண்டு சுதந்திர தினத்தன்று தொடங்கும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மும்பை — அகமதாபாத் இடையே **508** கிலோமீட்டர் தொலைவுக்கு அமைக்கப்பட்டு வரும் இந்த ரயில் பாதையில், **465** கிலோமீட்டர் தொலைவுக்கு உயர்மட்ட பாதையாக அமையும் என்று குறிப்பிட்டார்.

இதுவரை, **326** கிலோமீட்டர் தொலைவுக்கான பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ரயில் நிலைய கட்டுமானப் பணிகள் உள்ளிட்ட எஞ்சியப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பகல்நேர வந்தேபாரத் ரயில்களுக்கு நாடு முழுவதும் பெரும் வரவேற்பு கிடைத்திருப்பதாகவும், திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<<>>>>>

**இந்தியாவும், பாகிஸ்தானும் பரஸ்பரம் இரு நாடுகளிலும் உள்ள அணு மையங்களின் பட்டியலை பரிமாறிக் கொண்டுள்ளன.**

**அணு மையங்களின் மீது தாக்குதல் நடத்துவதை தடுப்பதற்கான ஒப்பந்தத்தின் அடிப்படையில், இருநாடுகளும் ஆண்டுதோறும் ஜனவரி**

ஒன்றாம் தேதி இந்த பட்டியல் பரிமாறிக் கொள்வதை வழக்கமாக கொண்டுள்ளன.

இதன்படி, புதுதில்லி மற்றும் இஸ்லாமாபாதில் உள்ள தூதரகங்கள் வாயிலாக இந்த பட்டியல் பரிமாறப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று, இருநாட்டு சிறைகளிலும் உள்ள கைதிகளின் பட்டியலும் பரிமாறிக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சிறையில் தண்டனை காலத்தை நிறைவு செய்த 167 இந்திய மீனவர்கள் மற்றும் பிற கைதிகளை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் இந்தியா கேட்டுக் கொண்டிருப்பதாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>

வந்தே மாதரம் பாடல், சுதந்திர போராட்டத்திற்கான பாடலாக மட்டுமின்றி, தேச ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் அடையாளமாக திகழ்கிறது என்று பிரசார் பாரதி தலைமை செயல் அதிகாரி திரு கௌரவ் துவிவேதி தெரிவித்துள்ளார்.

புதுதில்லி ஆகாஷ்வாணி பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கர்நாடக சங்கீதம் மற்றும் இந்துஸ்தானி சங்கீதத்தில் பாடப்பட்ட வந்தே மாதரம் பாடல்களை வெளியிட்டு அவர் பேசினார்.

வந்தே மாதரம் பாடல் பாடப்பட்டதன் **150**-ஆவது ஆண்டு விழாவையொட்டி, டிஜிட்டல் வடிவில் இந்த பாடல் வெளியிடப்பட்டு இருப்பதாக அவர் கூறினார்.

மொத்தம் **25** இசை வடிவங்களில் வந்தே மாதரம் பாடல் வெளியிடப்பட இருப்பதாகவும் திரு கௌரவ் துவிவேதி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

புதிய வகை **Fastag** பெற்றுள்ள கார்களுக்கு இனி **KYV** அட்டைகள் தேவையில்லை என்று இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அறிவித்துள்ளது.

பொதுமக்களின் வசதி மற்றும் சாலை பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக அந்த ஆணையம் கூறியுள்ளது.

ஏற்கனவே **Fastag** வசதியை பயன்படுத்தும் கார்களுக்கும் புகார்கள் ஏதும் இல்லையென்றால் **KYV** அட்டைகள் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

**WiFi** வாயிலான தொலைபேசி அழைப்பு சேவைகள் நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டு இருப்பதாக தொலைத்தொடர்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன் வாயிலாக, நாட்டின் அனைத்து தொலைத்தொடர்பு வட்டங்களிலும் உள்ள பிஎஸ்என்எல் வாடிக்கையாளர்கள் இந்த சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி சிக்னல் கிடைக்காத வீடுகள், அலுவலகங்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ளவர்கள் **WiFi** வசதியை பயன்படுத்தி, அழைப்புகளை மேற்கொள்ள முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப, தடையற்ற மற்றும் உயர் தரத்திலான தொலைபேசி வசதியை இந்த சேவை உறுதி செய்யும் என்றும் தொலைத்தொடர்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

தேசிய ஓய்வூதிய திட்டத்தை நிர்வகிப்பதற்காக வணிக வங்கிகள் பிரத்யேக ஓய்வூதிய நிதியங்களை உருவாக்கிக் கொள்ள ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் அனுமதி அளித்துள்ளது.

இதன்மூலம், ஓய்வூதிய திட்டத்தில் வங்கிகளின் பங்கேற்பு அதிகரிப்பதுடன், ஓய்வூதிய நிதியத்திற்கு கொடையாளர்களாக வங்கிகள் திகழ முடியும் என்றும் அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும், தேசிய ஓய்வூதிய திட்ட இயக்குனர் குழுவிற்கு பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தலைவர் திரு தினேஷ்குமார் காரா உள்ளிட்ட மூன்று புதிய உறுப்பினர்களையும் ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை ஆணையம் நியமித்துள்ளது.

<<<<<<<>>>>>

இந்திய விமானப்படையின் துணை தலைமை தளபதியாக ஏர் மார்ஷல் நாகேஷ் கபூர் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதுவரை, இப்பொறுப்பில் இருந்த ஏர் மார்ஷல் நர்மதேஷ்வர் திவாரி பணி ஓய்வு பெற்றதையடுத்து இவர் இப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று, பெங்களூருவை தலைமையிடமாக கொண்ட விமானப்படையின் பயிற்சி பிரிவு தலைமை அதிகாரியாக ஏர் மார்ஷல் சீத்தேபள்ளி ஸ்ரீனிவாஸ் இன்று பொறுப்பேற்றார்.

அதனைத் தொடர்ந்து, அந்த பயிற்சிப்பிரிவு வளாகத்தில் உள்ள போர் நினைவுச் சின்னத்தில் அவர் மலர் வளையம் வைத்து, மரியாதை செலுத்தினார்.

சென்னை தாம்பரம், ஆவடி உட்பட நாடு முழுவதும் உள்ள விமானப் படையின் பயிற்சிப் பிரிவுகளுக்கு இவர் பொறுப்பு வகிப்பார் என பாதுகாப்பு அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

இனி, கடந்த ஆண்டில் மத்திய அரசின் சாதனைகள் குறித்த தொகுப்பு.

**(Opening Tune — 20 Sec.)**

இதில் இன்று இடம்பெறுகிறது, விளையாட்டுத் துறையில் படைக்கப்பட்ட சாதனைகள்.

**(Sound Byte — 2.33 Sec.)**

<<<<<<<>>>>>

ரஷ்யா பிடித்து வைத்துள்ள **Kherson** பகுதியில் யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் **24** பேர் உயிரிழந்தனர். **50**-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

கருங்கடல் பகுதியில் உள்ள **Khorly** என்னுமிடத்தில், மக்கள் புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, யுக்ரைன் இந்த தாக்குதலை நடத்தியிருப்பதாக **Kherson** மாகாண ஆளுநர் திரு **Volodymyr Saldo** குற்றம் சாட்டியுள்ளார்.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகமும் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

குஜராத் மாநிலத்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Jensi — Anjel** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

அகமதாபாதில் இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **6-2, 6-3** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Sonal Patil — Bela Tamhankar** இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Mundhe Parthsarthi** மற்றும் **Vaidehi Chaudhari** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<END>>>>>**